DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC** 273/2024 |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : மதன் சிவாகர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th February 2026.

**1, 2, 4, 5 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது அம்மா நகரில் குடியிருந்து வருகிறேன். சாட்சி சங்கரநாராயணனை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எதிரிகளில் ஒருவரான சுரேஷை எனக்கு தெரியாது. சாட்சி பாலமுருகனை எனக்கு தெரியும். சாட்சி பாலமுருகன் எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் இருக்கிறார். கடந்த 2018ம் வருடம் சாட்சி பாலமுருகன் என்பவர் வீட்டில் நகைகள் திருடு போனது என்ற விபரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் 19.05.2018 தேதியயில் எதிரிகள் கொடுங்குசாமி, சுரேஷ், செல்வகுமார், கார்த்திகேயன் மற்றும் மூர்த்தி என்ற மாரிச்சாமி ஆகியோர் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையதல்ல. என்னிடம் காட்டப்படும் 19.05.2018 தேதியில் 17.00 மணிக்கு, 17.30

மணிக்கு மற்றும் 18.00 மணிக்கு, 1வது எதிரி கொடுங்குசாமியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுக்கான அத்தாட்சிகளில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதல்ல. அதே தேதியில் 19.30 மணிக்கு 2வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுக்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதல்ல. ஆனால் மேற்படி ஆவணங்களில் என்னுடைய கையொப்பம் போல போடப்பட்டுள்ளது. என் முன்பாக வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. என் முன்பாக ஆஜர் எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

19.05.2018 ம் தேதி 11.00 மணிக்கு சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய குற்ற எண்.71/2018 வழக்கினுடைய எதிரிகளை கைது செய்யவும், அவர்களிடமிருந்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றவும் என்னையும், சங்கரநாராயணன் என்பவரையும் காவல் ஆய்வாளர் சாட்சிகளாக இருக்குமாறு கோட்டுக்கொண்டாரா என்றால் இல்லை. தெற்கு பனவடலி ஊருக்கு மேற்கே சுமார் 1 கிமீ தொலைவில் உள்ள தென்னந்தோப்பில் போலீஸ் தனிப்படை சென்று பார்த்தபோது அங்கு சந்தேகத்திற்கு இடமாக TN 79D5983 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற TOYOTA எடியோஸ் காரிலும், TN 72BH9999 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற மாருதி ஸ்பிட் என்ற காரையும் நிறுத்தி வைத்து அதன் அருகில் பேசிக்கொ்ண்டிருந்த ஆஜர் எதிரிகளும், சுரேஷ் என்ற எதிரியும் போலீஸ் பார்டியை கண்டதும் தப்ப முயற்சித்தவர்களை மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவர்களை கைது செய்தவிபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் பின்பு மேற்படி 5 எதிரிகளும் தாமாக முன் வந்து தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலங்கள் என் முன்புக்கும் சங்கரநாராயணன் முன்புக்கும் கொடுத்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்களையும், மேற்படி வாகனங்களையும் அத்தாட்சிகள் பிறப்பித்து எங்கள் இருவர் முன்புக்கும்

போலீசார் கைப்பற்றினார்கள் என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களிலும்,மேற்படி அத்தாட்சிகளிலும் நானும், சங்கரநாராயணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டுதற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**